بسم الله الرحمن الرحيم

**Friday Sermon** / வெள்ளிக்கிழமை  குத்து.ஃபா

**26 January 2018**

**(08 Jamad'ul Awwal 1439 A.H)**

# "A DIVINE WARNING"

## "ஒரு  தெய்வீக  எச்சரிக்கை"



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)**

உலக மக்களுக்கு சலாம் கூறிய பிறகு தஸஹ்ஹுதும், தஅவசும் அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக் கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம்(அலை)** அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

**“ஒரு தூதரை அனுப்பாதவரையில் எவரையும் நாம் தண்டிப்பதில்லை” (17:16)**

அன்புக்குரிய என் சகோதரி சகோதரர்களே! மிக நன்றாக சிந்தித்துக் கொள்ளுங்கள்! இந்த ஆண்டு(2018) ஆரம்பத்திலிருந்து மௌரீஷியஸ் மிக கடினமான சூழ்நிலைகள் வழியாக பயணம் செய்கின்றது. புது வருடம் 1-ம் தேதி தான் ஒரு பெரிய அபாயம் நிகழ்ந்தது. அந்த அபாயத்தில் இரண்டு சகோதரர்கள் உயிரிழந்தனர். அதன் மறுநாள் முன்னாள் கணவர் ஒருவர் தம் முன்னாள் மனைவியை துப்பாக்கியால் சுட்டு கொன்றார். (தம் முன்னாள் கணவரின் மனையில் தம் குழந்தையை சந்திக்க சென்ற போது) பின்னர் அவர் தன்னை சுயம் சுட்டு தற்கொலை செய்துவிட்டார்.

ஜனவரி 1-ம் தேதி ஆரம்பித்த மழை இன்றும் முடிவடையவில்லை. 2018 ஜனவரி 07-ம் தேதி ஞாயிற்றுக்கிழமையைத் தவிர்த்து மற்றெல்லா நாள்களிலும் கனமழையாகயிருந்தது. 2018 ஜனவரி 8-ம் தேதி பாடசாலைகள் திறந்த நாள் கனமழை மேலும் ஆரம்பித்தது. விவசாயத் துறையினை அது அழித்துக் கொண்டது. (பழங்களும் மற்றும் காய்கறிகளும்) ஆயிரக்கணக்கிற்கான வீடுகளும் பொருட்களும் மற்றும் கார்களும் அழிந்து விட்டது. பிறகு **“பெர்குயிட” (Berguita)** என்ற பெயரைக் கொண்ட ஒரு சூறாவளி உருவானது. அந்த ஆபத்தான சூறாவளி 2018 ஜனவரி 16-ம் தேதி முதல் 18-ம் தேதி வரையில் சூழ்நிலையினை மேலும் மோசமாக்கியது. மௌரீஷியஸில் முதலாவதாக (பல ஆண்டுகளுக்கு பிறகு) ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் அகதி மையங்களில் தஞ்சம் கொண்டுள்ளனர். மனைகளையும் அவர்களின் பொருள் வகைகளையும் அவர்கள் கைவிட்டு கொண்டனர். அந்த சூறாவளியிலிருந்து தங்களுடையவும் குடும்ப உறுப்பினர்களுடையவும் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்கான முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டனர். சமூக ஊழியர்களும், எதற்கு இன்னும்

கூறவேண்டும் அரசாங்கத்திற்கு கூட அந்த மக்களுக்கு உதவியாக பிஸ்கட் மற்றும் பாட்டில் தண்ணீர் மட்டுமே விநியோகிக்க முடிந்தது.

பெர்குயிட சூறாவளி முடிந்தப்பின் காய்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவைகள் சந்தைகளிலிருந்து ஏறக்குறைய மறைந்து விட்டது. எஞ்சிய காய்கறிகளுடையவும் பழங்களுடையவும் விலை உயர்ந்துள்ளது. மௌரீஷியஸ் மக்களுக்கு இது மிக வருத்தம் விளைவிக்கும் நிலையை உருவாக்கியிருக்கின்றது. அனைத்து வகையான பொருட்களுடையவும் விலை உயர்ந்துள்ளது. கனமழையும் மின்னலும், பர்குயிட சூறாவளியும் நாட்டிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. சாக்கடைகளும் கால்வாய்களும் உடைந்து தெருக்களில் யாவும் தண்ணீர் புகுந்துள்ளது. கார்கள் நாசமடைந்துள்ளது. அதன் பிறகு சில பகுதிகளில் மழையின் அடர்த்தியில் மந்தம் ஏற்ப்பட்டுள்ளது. ஆனால் மற்ற பகுதிகளில் துரதிருஷ்டத்தை விளைவிக்கும் மழை அடர்ந்து கொண்டிருக்கின்றது.

தற்போது நிலமை மிக மோசமாகியிருக்கினறது. ஜனவரி 24-25 (புதன்-வியாழன்) தேதிகளில் கனமழை இருப்பதாக அரசாங்கம் முன்னெச்சரிக்கை விடுத்துள்ளது. பள்ளிக்கூடங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் அலுவலகங்கள் போன்றவற்றை மூட வேண்டிய கட்டாய நிலைக்கு அரசு ஆளாகியுள்ளது. தொடர்ந்து வரும் மழையும் பெருகி வரும் நீரும் மௌரீஷியஸ் மக்களிடத்தில் பீதியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையைக் கருத்தில் கொண்டு சுகாதார அமைச்சகம் மக்களிடம் வென்னீரை மட்டும் அருந்திக் கொள்ளுமாறு அறிவுரை விடுத்துள்ளனர். இரைப்பைகுடல் அழற்சி போன்ற வியாதிகளில் அகப்படாமலிருக்க, ஆரோக்கிய சம்மந்தமான காரியங்களில் கவனம் வைத்துக் கொள்ளுமாறு எச்சரிக்கை அளிக்கப்பட்டுள்ளது. பல்வகையான முன்னெச்சரிக்கையிருந்தும், இமைப்படல அழற்சி போன்ற நோய்களால் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

மௌரீஷியஸ் சந்தித்து வரும் எல்லா காரியங்களையும் விளக்குவதற்கு ஆகாது. ஏனெனில் எங்களின் இந்த சிறு தீவு ஒன்றுக்குப்பின் மற்றொன்று என்ற நிலையில் ஏராளம் சோதனைகளை எதிர் கொண்டு வருகின்றது. **இறை தூதரின்**

முன்னெச்சரிக்கைக்கு மக்களும் அரசாங்கமும் செவிசாய்காமலிருந்ததே இந்த பிரச்சனைகளுக்கெல்லாம் காரணம். ஆனால் இந்த பேரழிவுகள் அதாவது இத்தகைய அபாயங்கள் நேர்மையான மக்களை பாதிப்பதற்கும், நேர்மையற்றவர்களை (இறை மறுப்பிலும் பாவத்திலும் மூழ்கியிருப்பவர்களை) பாதிப்பதற்கும் இடையில் மிகப்பெரிய வித்தியாசம் உள்ளது.

நேர்மையான மக்களை பாதிக்கும் அபாயங்களும் இன்னல்களும் அவர்களுக்கு மகிழ்ச்சியின் ஊற்றாக மாறிவிடுகின்றது. அது அவர்களிடமிருக்கும் பொறுமை காரணமாகும்.

அவர்களின் இந்த மகிழ்ச்சிக்கு காரணம், இத்தகைய விபத்துகள் அவர்களை ஆன்மீக முன்னேற்றத்தின் பால் அழைத்துச் செல்கின்றது. இத்தகைய சோதனைகள் அவர்களின் ஆன்மீக உயர்வுக்கு காரணமாகின்றது. அது அவர்களுக்கு கிடைக்கும் ஒரு ஏணியைப்போன்றாகும். அது மூலம் அவர்கள் ஆன்மீகத்தின் உச்சத்தை அடைகின்றனர்.

இத்தகைய கஷ்டங்கள் வாயிலாகவும், சிரமங்கள் வாயிலாகவும் நுழைந்து செல்லாதவர் ஒரு போதும் முன்னேற்றத்தை அடைவதில்லை. இன்னொருபுறம்,பாவியைப்பொறுத்த வரையில் அவரை பாதிக்கும் அபாயங்களும், சிரமங்களும் அவரது தீய செயல்களின் விளைவாகயிருக்கும். அவரது தீய செயல்கள் தான் உண்மையில் ஆபத்தாக இருக்கின்றது. அது அவரை கோபத்தின் பால் கொண்டு செல்கின்றது. அது மூலம் அவரது வாழ்க்கை, அவருக்கு தாங்க முடியாத நிலையை அடைகின்றது. அத்தகைய ஒரு நபர் மரணத்தை விரும்புகின்றார். அவர் வாழ்ந்து கொள்ள ஆசைப்படுவதில்லை. அவரை பாதிக்கும் அபாயங்கள்யாவும் அவரது மரணத்தோடு முடிவடைவதில்லை என்பதை அவர் பகுத்தறிவதில்லை. அவரை பொறுத்த வரையில், இந்த நிலை அவரது மரணத்திற்கு பிறகும் நிலவுகின்றது. இந்த உண்மையை அவர் உணர்ந்து கொள்வதில்லை.

சுருக்கமாக, இயர்க்கைச் சட்டப்படி இத்தகைய அபாயங்கள், கட்டுப்பாடின்றி தீய நடத்தையில் முழுகியிருப்போர்களுக்கு ஓர் முன்னெச்சரிக்கையாக இருக்கின்றது. இத்தகைய முன்னெச்சரிக்கைகள்

விடுப்பது மூலம் அவர்களுக்கு ஆன்மீக உயர்வை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பைப் அளிக்கப்படுகின்றது.

இத்தகைய நிகழ்வின் இரகசியத்தை புரிந்து கொள்ளாதவர்கள், இதிலிருந்து பலனை அடைவதற்கு பதிலாக, தங்களின் வாழ்க்கையில் திருத்தத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கு பதிலாக, உண்மையான ஏக இறைவனின் பால் திரும்பிக் கொள்வதற்கு பதிலாக, அவர்கள் செவிகேளாதவர்களை போன்று திரும்பி தம் முன்னாள் வாழ்கையைப்போன்று அறியாமையில் வாழ்வதற்கே விரும்புகின்றனர். அறியாமை எனும் நோய் எவ்வளவு அபாயமானதாகும்! ஒன்றுக்கொன்று ஒப்பிடமுடியாத காரியங்களை அவர்கள் ஒப்பிட்டுக் கொள்கின்றனர். இறை தூதர்களுக்கு (நபிமார்கள்) சந்திக்க நேரும் சோதனைகளையும், சாதாரண மக்களுக்கு சந்திக்க நேரும் சோதனைகளையும் ஒன்றுக்கொன்று ஒப்பிடுவது முற்றிலும் தவறாகும். அல்லாஹ்வின் தூதர்கள் மீதும் மற்றும் அவன் தேர்ந்தெடுப்பவர்கள் மீதும் இறங்கும் சோதனைகள் இறை அன்பின் ஒரு அடையாளமாக இருக்கின்றது. ஏனெனில் இந்த சோதனைகள் மூலம் இறைவன் அவர்களுக்கு ஆன்மீக சாம்ராஜ்யத்தில் உயரிய பதவியை அளித்துக் கொள்கின்றான்.

ஆனால் குற்றவாளிகள் அத்தகைய சோதனைகளை எதிர் கொள்ளும்போது, அது மூலம் இறைவன் அவர்களை அழித்துக் கொள்ள ஆயத்தமாகின்றான். **“மானிட குலத்திற்கு முன்னெச்சரிக்கை விடுப்பதற்கு பல்வேறு முறை வெளிப்பாடுகள் மூலம் அவன் என்னை தெரிவித்திருக்கின்றான்.** மனிதன் தோன்றிய காலம் முதல் இதுவரையிலும் நிகழாதவகையில் அழிவுகள் ஏற்படும், இரத்தம் அதிகமளவிற்கு சிந்தப்படும். (அந்த அபாயத்திலிருந்து விலங்குகளும் பறவைகளும் கூட விலகியிருப்பதில்லை). ஏராளமாக வீடுகள் அழிந்துவிடும். இதுவரையிலும் குடியேற்றமில்லாத பகுதியைப் போன்று அவ்விடம் தென்படும். வேறு விதமான தண்டனைகள் பல்வேறு வடிவங்களில் ஆகாயத்திலும் பூமியிலும் இறங்கும். இது அசாதாரணமான நிகழ்வு என்பதை விவேகமுள்ள மனிதர்கள் உணர்ந்துக் கொள்வார்கள். மானிட சமுதாயம் மிக பெரிய ஆபத்துகளில் அகப்பட்டுவிடும். (இவ்வுலகிற்கு என்ன) நிகழ்கின்றது என்று மனிதர்கள் ஆச்சரியத்துடன் பார்வையிடுவார்கள். ஏராளமான மக்கள் உயிர் பிழைப்பார்கள்.

ஆனால் ஏராளமான மக்கள் அழிந்து விடவும் செய்வார்கள். அந்நாள்கள் நெருங்கிவிட்டது. அது வீட்டுவாசலை அடைந்துவிட்டது. விதி நாள் வந்தடைந்தது போன்ற காட்சிகளுக்கு உலகம் சாட்சியாகயிருக்கும். நில அதிர்ச்சியும் அதைப்போன்று நம்மை அஞ்சவைத்துக் கொள்ளும் வேறு விதமான துயரங்களும் நிகழும். சிலது ஆகாயத்திலிருந்தும் வேறு சிலது பூமியிலிருந்தும் வெளிப்பட்டு கொள்ளும். **என் அன்புக்குரிய சஹாபி பசில் ஜமால் (டெல்லி, இந்தியா – சர்வ தேசிய அளவில் ஜமா அத்துசஹீஹில் இஸ்லாமிற்காக பணியாற்றிவருபவர்) சாஹிப்பிடம் நான் கேட்டுக் கொள்கின்றேன். நான் வெளிப்பாடைப் பெற்றுக் கொண்டதிலிருந்து உலகின் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்த இத்தகைய விபத்துகளை பற்றிய ஒரு தொகுப்பை தயாரித்துக் கொள்வதற்கு! இது, சர்வதேசிய அளவிலான சூழ்நிலைகளை குறித்து ஒரு யோசனைக்காகும். அல்ஹம்துலில்லாஹ்! அன்னார் மிக சிறந்த பொறுப்பை நிறைவேற்றி வருகின்றார்!**

இவையனைத்தும் நிகழவே செய்யும்! ஏனெனில் உண்மையான இறைவனை வணங்குவதிலிருந்து மனிதர்கள் விலகிநிற்கின்றனர். அவர்களின் கவனங்கள் அனைத்தும் இவ்வுலக காரியங்களின் மீதாகும். பௌதீக அருட்களை மட்டும் அவர்கள் (நாடுகின்றனர்). மக்களிடமிருந்து இறையருளுகள் மறைந்து விட்டது. (ஏனெனில் இவ்வுலக காட்சிகளில் மட்டுமே அவர்கள் பார்வை வைத்திருக்கின்றனர்)

இந்த நூற்றாண்டில் நான் தோன்றாமலிருந்திருந்தால் இந்த துயரநிலை சற்று தாமதமாக வந்திருக்கும். ஒரு நீண்ட காலத்திற்கு பிறகு, கோபம் முடையவனாகிய இறைவனின் திட்டங்கள் என் வருகையுடன் தென்பட்டு விட்டது. அவன் கூறியிருப்பது போன்று **“ஒரு தூதரை அனுப்பாதவரையில் எவரையும் நாம் தண்டிப்பதில்லை”(17:16)**

பாவமன்னிப்பு கோரிவிட்டால் பாதுகாக்கப்படும். கவலைக்குரிய நிலையை அடைவதற்கு முன்னதாக பாவ மன்னிப்பை கோருங்கள். இறைவனை அஞ்சுங்கள். அத்தகையவர்கள் மீது அல்லாஹ்வின் இரக்கம் இறங்கிவிடும். எந்த ஓர் அபாயமும் உங்களுக்கு வருவதில்லை என்று உங்களுக்கு

உறுதியிருக்கின்றதா? நீங்கள் பாதுகாப்பாகயிருக்கின்றீர்களா? நிச்சயமாகவும் இல்லை. வல்லமை மிக்க இராஜியங்கள் அல்லது வேறு இராஜியங்கள், இவை வல்லமைமிக்கதாகட்டும் வல்லமையிழந்ததாகட்டும், இன்னும் எதற்கு கூறுகின்றேன் தீவுகள் கூட அதிலிருந்து விலகி நிற்பதில்லை. உங்களுக்காக மிக கடினமான துயரங்களை அவன் சேமித்து வைத்திருப்பதை எண்ணி நான் அஞ்சுகிறேன்.

உங்கள் அனைவரிடத்திலும் நான் கூறுகின்றேன். நீங்கள் எவரும் பாதுகாப்பு வட்டாரத்திற்குள் அல்ல. உலகில் எந்த ஒரு இராஜியத்தையும் அது விட்டு வைப்பதில்லை. தீவுகளை சார்ந்தவர்களை கூட! உங்கள் மனைகளிலிருக்கும் ஒரு சக்திக்கும் உங்களுக்கு துணை புரிய ஆகாது. நான் என் இரட்சகனின் கண்களால் தான் பார்வையிடுகின்றேன். ஐய்யமூட்டும் பல்வேறு பொருட்கள் மூலம் இவ்வுலகம் தூளாகிவிடும். அந்த ஏக இறைவன் சில காலம் மௌனமாகயிருந்தான். ஆனால் இப்பொழுது நேரம் நெருங்கி விட்டது. என் வருகையுடன் எல்லாம் வல்ல இறைவன் அவனது பயங்கரமான முகத்தை நிச்சயமாகவும் உங்களுக்கு காண்பிப்பான். என் வருகை, இறைவாக்குறுதிப்படியாகும். நான் இறைவனின் எளிய சேவகன்., ஒரு முனனெச் சரிக்கையாளர். இல்லாஹ்வை பரிபூரணமாக நீங்கள் வணங்கி கொள்ள வில்லையென்றால் அந்த மாபெரும் அபாயத்தை எதிர்பாத்திருங்கள். எல்லாம் வல்ல இறைவன் நிச்சயமாகவும் அவனது பயங்கரமான முகத்தை உங்களுக்கு காண்பித்து கொள்ளவே செய்வான். செவியிருப்போர்கள் கேட்கட்டும். அந்தநேரம் வெகு தொலைவிலல்ல. குற்றவாளிகளை இறை கோபம் பிடித்து கொள்ளவே செய்யும்.

**இறை பாதுகாப்பின் வட்டாரத்ததில் உங்கள் அனைவர்களையும் ஒன்றிணைக்க நான் முயற்சித்தேன். உங்களின் கருத்து வேறுபாடை மறந்து விட நான் கூறியிருந்தேன். மிக தாழ்மையுடனிருக்க நான் உங்களிடம் கேட்டுக்கொண்டேன். சிறிய காரியத்தின் பெயரில் வீணாக வாதாடாதீர்கள். நமக்குள் போர் வேண்டாம் என நான் கூறியிருந்தேன். நமக்கு அமைதியை நிலைநாட்டுவோம். ஒன்றுக்கொன்று மோதிக்கொள்பவர்களிடம் பொறுமையாக இருப்பதற்கும் அமைதியை நிலைநாட்டுவதற்கும் நான் கூறியிருந்தேன். நீங்கள்**

நெறியான வழியில் இருக்கின்றீர்கள் என்றால் ஒரு தாய் பெற்ற பிள்ளைகளைப் போன்று சகோதர, சகோதரிகளாகயிருங்கள். நீங்கள் திமிர் பிடித்தவர்களை போன்று ஆகாமலிருங்கள். அகந்தையுடன் நடந்து கொள்ளாதீர்கள். இதை தெரிவித்து கொள்ளும் போது, நான் இச்செய்தியை என் எல்லா தோழர்களுக்கும், சஹாபிகளுக்கும் பகிர்ந்திட விரும்புகிறேன். அல்லஹ்வின் தூதருக்கு துன்புறுத்தல் விளைவிக்காமலிருங்கள். இறை தூதரின் இதயத்தை துக்கமும் துயரமும் கொண்டு நிறைத்துகொள்ளாமலிருங்கள். நீங்கள் ஓருவருக்கொருவர் கருத்து வேறுபாடுகளுடன் இருப்பதை பார்க்கும் போது, நீங்கள் அமைதியை இழக்கும் போது, அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படாமலிருக்கும் போது, இறைவனின் பயங்கரமான தண்டனையைக்குறித்து நீங்கள் ஜாக்கிரதையுடன் இருங்கள்!

நான் உங்களிடம் கூறுவதை கவனியுங்கள். இம்மையிலும் மறுமையிலும் மோட்சத்தை அடைவதற்கு நீங்கள் ஏக இறைவன் பால் திரும்பிக் கொள்ளுங்கள். பாவமன்னிப்புக்கோருங்கள். எல்லா பாவங்களுக்கும் குறைகளுக்கும் இறை தூதர் உங்களில் திருப்தியாக இருந்தால், நிச்சயமாகவும் அல்லாஹ்வும் உங்களிடம் திருப்தியாக இருப்பான். உங்களை நேசிப்பதற்கு அவன் மலக்குகளுக்கு கட்டளைவிடுப்பான். ஏனெனில் அல்லாஹ் தேர்ந்தெடுத்த நபரை நீங்கள் நேசித்துக்கொள்வதாலும் அவருக்கு நீங்கள் கட்டுப்பட்டுக்கொள்வதாலும்! இன்ஷா அல்லாஹ்.

மானிட குலமே! இறைவிதி நிச்சயமாகவும் நடந்துவிடவே செய்யும். வருகின்ற நாட்கள் நோகாவின் நாட்களாக நீங்கள் காண்பீர்கள். பாவமன்னிப்பைக் கோருங்கள். அவன் உங்களுக்கு அதிகமான நேரத்தை அளிப்பான். ஆகவே நீங்கள் பாவமன்னிப்பைக் கோருங்கள். இறைகருணை உங்களில் இறங்கிவிடும். இறைவனை கைவிடுபவர் மனிதனல்ல. அவர் ஒரு புழுவாவர். அல்லாஹ்வை அஞ்சாதவர் ஒரு சடலமாவர். அவர் உண்மையில் வாழ்ந்திருப்போர் அல்ல.

அல்லாஹ் உங்களை நெறியான பாதையில் வழிநடக்கச் செய்வானாக! உங்களின் இதயங்களையும் மனதுகளையும் அவன் ஒளிரச்செய்வானாக! இந்த

உரையினை நன்கு உணர்ந்து கொள்ள உங்களுக்கு முடிந்து விடட்டும். எந்த தாமதமுமில்லாமல் இந்த அறிவுரைக்கு கட்டுப்பட்டு செயல்பாடுங்கள். நீங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஏக இறைவன்பால் திரும்பிக்கொள்ளுங்கள். மேலும் மன்னிப்பை கேளுங்கள். உங்களுடன் தொடர்புடைய அனைத்து காரியங்களுக்கும் உதவி கேளுங்கள். அது இவ்வுலகவிஷயமானாலும் சரி, மறுவுலகவிஷயமாானலும் சரி! அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு செயல்படுங்கள். அவனிடம் நம்பிக்கையுடன் இருங்கள். உங்களுக்கு முழுமையாக நம்பிக்கை வைத்து கொள்வதற்கு அவன் மட்டுமே உள்ளான். நம் பாதுகாவலனாகவும் அவன் மட்டுமேயிருக்கின்றான். இன்ஷா அல்லாஹ் . அமீன்.


**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com


**Issued by:**




**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**
**Email:** jamal.raother@gmail.com
**Phone:** 9447001832, 04752252663